குடிசனத்தொகையின் விரைவான வளர்ச்சிவிகிதத்தைநோக்கும் பொழுது செலவு, நிரம்பல்களின்பேரில் உள்ள தரவுகளை சராசரி தனியாள் நியதிக்கேற்பப் பெயர்த்து, அவற்றின் நாடமாட்டங்களை அவதானித்தல் அவசியமாகின்றது.

**சராசரி ஆளுக்குரிய நடமாட்டங்கள்.**

செலவு, நிரம்பல்களின் பிரதான அம்சங்களில் ஏற்பட்ட சராசரி ஆளுக்குரிய நடமாட்டங்கள் பின்வரும் அட்டவணையிற் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை II—15

**சிலைக்கொள் விலையின்படி, செலவு, நிரம்பல்களின் பிரதான அம்சங்களில் ஏற்பட்ட சராசரி ஆளுக்குரிய உண்மையான நடமாட்டங்கள் (1956=100)**

| குறிக்காட்டிகள் | 1958 | 1959 | 1960 |
|---|---|---|---|
| 1. சொந்த நுகர்ச்சி .. .. .. .. .. | 105.8 | 109.2 | 111.5 |
| 2. மொத்த மூலதன ஆக்கம் .. .. .. .. | 90.1 | 101.9 | 103.3 |
| 3. பொருட்கள், சேவைகள் முதலியவற்றின் ஏற்றுமதிகள் .. .. .. .. .. | 95.2 | 96.6 | 94.3 |
| 4. பொருட்கள், சேவைகள் முதலியவற்றின் இறக்குமதிகள் .. .. .. .. .. .. | 106.2 | 116.7 | 115.6 |
| 5. சராசரி ஆளுக்குறிய விளைவு (மொத்ததேசிய உற்பத்தி) | 99.8 | 100.9 | 102.1 |

மூலம்: இலங்கை மகாவங்கி

நடைமுறை விலைகளின்படி, 1959ம் ஆண்டு 584 ரூபாய்களாக விளங்கிய சராசரி ஆளுக்குரிய வருமானத்துடன் ஒப்பிடுகையில், 1960ம் ஆண்டு இது 600 ரூபாய்களாக விளங்கியது.

ஒரு ஆளுக்குரிய உண்மையான உற்பத்தியின் வளர்ச்சி முந்தைய ஆண்டிலும் பார்க்க 1.2 சதவீதம் கூடியதாக விளங்கியது. கடந்த ஐந்து ஆண்டுகளில், வளர்ச்சி விகிதம் 1 சதவீதச் சராசரியாக உள்ளது. 1960ம் ஆண்டின் வளர்ச்சி விகிதம், முந்தைய ஆண்டில் காணப்பட்ட வளர்ச்சி விகிதத்திலும் பார்க்க சிறிது குறைந்தது ஆகும். இலங்கையைப் போன்ற பொருளாதார வளர்ச்சி பெருத ஒரு நாடு விரும்பத்தக்க வளர்ச்சிமட்டத்திலும் பார்க்க குறைவாகவே, மேற்படி வளர்ச்சி விகிதம் விளங்குகின்றது.

## (ஆ) வெளிநாட்டு வர்த்தகம்

**பொதுப்படையான போக்குகள்**

1960ம் ஆண்டு ஏற்றுமதிகளின் பெறுமானம் 18320 இலட்சம் ரூபாய்கள் ஆகும். இது 1959ம் ஆண்டுத் தொகையிலும் பார்க்க 780 இலட்சம் ரூபாய்களால் கூடியது ஆகும். இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப் பின்னர், வியாபாரச் செழிப்பு ஏற்பட்ட 1951, 1955ம் ஆண்டுகளைத் தவிர்ந்த ஏனைய ஆண்டுகளில் கிடைத்த தொகையிலும் பார்க்க இது உயர்ந்தது ஆகும். கடந்த ஆண்டில் எக்காலத்தும் இல்லாத ஆகக்கூடிய மட்டமான 20050 இலட்சம் ரூபாய்களை அடைந்த இறக்குமதிகளின் பெறுமானம் 1960ம் ஆண்டு 19600 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியடைந்தது. பிரதிகூலமான வர்த்தக நிலுவை 1960ம் ஆண்டிலும் ஏற்பட்டது. ஆனல் 1959ம் ஆண்டில் 2510 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய எதிரிடையான வர்த்தக மீதி 1960ம் ஆண்டு 1280 இலட்சம் ரூபாய்களுக்குச் சுருங்கியது.

ஏற்றுமதிகளின் அளவில் உண்டான ஒரு கணிசமான (5 சதவீத) அதிகரிப்பு காரணமாக ஏற்றுமதிகளில் காணப்பட்ட சீர்திருத்தம் ஏற்பட்டது. ஏற்றுமதி விலைக் குறிகாட்டியில் மாற்றமெதுவும் நிகழவில்லை. இறக்குமதிகளின் பெறுமான வீழ்ச்சிக்கும், அளவில் ஏற்பட்ட 4 சதவீத சுருக்கமே காரணமாகும். இறக்குமதி விலைக்குறிகாட்டி மாற்றமின்றி விளங்கி நின்றது. 1960ம் ஆண்டு, வர்த்தக மாற்று விகிதம் 1959ம் ஆண்டில் இருந்ததைப் போலவே விளங்கியது.

அட்டவணை II—16

**ஏற்றுமதிகளின் அமைப்பு**

| பண்டம் | இலட்சம் ரூபாய்களில் பெறுமானம் | | | மொத்த ஏற்றுமதியின் சதவீதமாக | | |
|---|---|---|---|---|---|---|
| | 1958 | 1959 | 1960 | 1958 | 1959 | 1960 |
| தேயிலை .. .. .. .. | 11320 | 10460 | 10960 | 66.2 | 59.6 | 59.8 |
| இறப்பர் .. .. .. .. | 2580 | 2980 | 3780 | 15.1 | 17.0 | 20.7 |
| மூன்று பிரதான தெங்கு உற்பத்தி பொருட்கள் .. .. .. | 1640 | 2440 | 1840 | 9.6 | 13.9 | 10.0 |
| ஏனைய உள்நாட்டு ஏற்றுமதிகள் .. | 970 | 1040 | 1170 | 5.7 | 6.0 | 6.4 |
| **மொத்த உள்நாட்டு ஏற்றுமதிகள்** .. | 16510 | 16920 | 17750 | 96.6 | 96.5 | 96.9 |
| திருப்பி ஏற்றுமதி செய்யப்பட்டவை | 590 | 620 | 570 | 3.4 | 3.5 | 3.1 |
| **மொத்தம்** .. | 17110 | 17540 | 18320 | 100.0 | 100.0 | 100.0 |

மூலம்: இலங்கைச் சுங்க புள்ளிவிபரங்கள்.

1959ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1960ம் ஆண்டு ஏற்றுமதிகளின் பெறுமானத்தில் ஏற்பட்ட மாற்றங்களுக்குப் பொறுப்பான காரணிகள் வெவ்வேறானவையாகும். தேயிலை ஏற்றுமதியளவில் ஒரு குறிப்பிடத்தகுந்த (7 சதவீத) அதிகரிப்பு ஏற்பட்டது. தேயிலையின் ஆண்டுச் சராசரி விலை சிறிது குறைந்தது. இஃது 1955ம் ஆண்டின் வியாபாரச் செழிப்புகால விலைகளுக்குப் பின்னர் முதல் முதற் தோன்றிய கீழ் நோக்கப் போக்கின் தொடர்ச்சியாகும். கடந்த மூன்று ஆண்டுகள் ஒவ்வொன்றிலும் தேயிலையின் விலை 1சத வீதத்திற்கு சிறிது கூடுதலாக வீழ்ச்சியடைந்துள்ளது. 1960ம் ஆண்டு ஏற்றுமதிகளாற் கிடைத்தவருவாய் உயர்வதற்கு உதவியாக தேயிலையின் பெறுமானம் 500 இலட்சம் ரூபாய்கள் அதிகரித்தது எனினும் இரப்பரின் பெறுமானம் 800 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தது. இரப்பர் ஏற்றுமதியால் கிடைந்த வருவாயின் அதிகரிப்புக்கு விலைவாசிகளில் ஏற்பட்ட 11 சதவீத உயர்ச்சியும் அளவில் ஏற்பட்ட 14 சதவீத அதிகரிப்புமே காரணங்களாகும். தேயிலை இரப்பர் ஆகியவற்றின் பெறுமானங்கள் அதிகரித்தமைக்கு மாறாக பிரதான தெங்கு உற்பத்திப் பொருட்களினது ஏற்றுமதிகளின் பெறுமானம் 600 இலட்சம் ரூபாய்களால் குறைந்தது. இது ஏற்றுமதி செய்யப்பட்ட தொகை 13 சத வீதம் வீழ்ச்சியடைந்தமையாலும் விலைவாசி 13 சதவீதம் வீழ்ச்சியடைந்தமையாலும் ஏற்பட்டது.

வெளிநாட்டுக் கைத்தொழில் இயக்கங்களில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களாற் பாதிக்கப்படும் இரப்பரின் விலைவாசியைப் போன்று தேயிலை விலைவாசி பெரிதும் பாதிக்கப்படுவதில்லை. உள்நாட்டுத் தேயிலை உற்பத்தியில் ஏற்பட்ட ஒரு நடுத்தரமான அதிகரிப்பு, உலக சந்தைகளில் ஒரு சிறு விலைக்குறைப்புடன் மாத்திரம் உட்கொள்ளப்பட்டது. இதற்கு மாறாக, இரப்பரின் விலை வெளிநாட்டுக் கைத்தொழில் இயக்கத்தில் ஏற்பட்ட மந்தத்துடன் 1960ம் ஆண்டின் முன் அரைப் பகுதியில் வீழ்ச்சியடையத் தொடங்கியது. 1960ம் ஆண்டு மார்கழி மாதமளவில் இரப்பரின் விலை ஆண்டு ஆரம்பத்தில் கிடைத்த உச்ச விலையிலிருந்து 23 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தது. தெங்குப் பொருட்களினது ஏற்றுமதி விலைகளின் நடமாட்டங்கள் மேற்கூறியவற்றிலும் பார்க்க கூடிய முறையில் குறிப்பிடத் தகுந்தவை. இவ்விடயத்தில் வெளிநாட்டுக் கைத்தொழில் இயக்கத்தின் மந்தத்தினால் தோன்றிய இந்த நிலமையோடு போட்டிப் பொருட்களாகிய கொழுப்பு, எண்ணெ மற்றும் தெங்கு உற்பத்திப் பொருட்கள் முதலியனவற்றின் பெருக்கம் உலகத்தில் ஏற்பட்டமையால், மேலும் சீர்கேடு அடைந்தது. முந்தைய இரு ஆண்டுகளில், தேங்காயெண்ணை நிரம்பல் குறைவுற்றமையாலும், வெளிநாட்டுக்கேள்வி அதிகரித்தமையாலும் தெங்குப் பொருட்களின் விலைவாசிகள் விரைவாக மேலேற்றம் அடைந்தன. 1959ம் ஆண்டு முடிவில் இவ்விலைவாசிகள் ஊதியமுள்ள உயர்ந்த மட்டங்களை அடைந்தன. ஆயினும் 1960ம் ஆண்டின் முதல் மாதங்களில் விலைவாசிகள் பெரிதும் குறையத் தொடங்கின. இவ்வீழ்ச்சி தட்டுத்தடையின்றி மேலும் தொடர்ந்து சென்றது. ஆண்டு ஆரம்பத்தில் கிடைத்த விலை மட்டங்களிலும் பார்க்க, ஆண்டு முடிவில் விலைவாசிகள் 29 சத வீதம் குறைவாக நின்றன.

ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட இந்த நடமாட்டங்களினது இணைந்த விளைவின் பயனாக ஏற்றுமதி விலைக்குறிகாட்டி, 1959ம் ஆண்டில் இருந்த மாதிரியே 1960ம் ஆண்டும் விளங்கியது. ஆண்டின் கடைப் பகுதியிலே ஏற்றுமதிப் பண்டங்களினது விலைவாசிகளில் ஏற்பட்ட சீர்கேடு முன்னர் கிடைத்த உயர்ந்த விலைகளை முற்றாக ஈடுசெய்தது.

ஏற்றுமதி அளவுகளில் ஏற்பட்ட 5 சதவீத உயர்ச்சி 1960ம் ஆண்டின் இறக்குமதித் தேவைகளைச் சமாளிக்கப் போதியதாக விளங்கவில்லை. இதன் பயனாக வர்த்தக நிலுவையில் 1280 இலட்சம் ரூபாய்கள் பிரதிகூலமாயிற்று. 1960ம் ஆண்டு இறக்குமதிகளின் பெறுமானம் தொடர்ச்சியாக ஒரு உயர்ந்த மட்டத்திலேயே தங்கி நின்றது. 1959ம் ஆண்டு அடைந்த என்றுமில்லா உயர்ந்த மட்டத்திலிருந்து இப் பெறுமானம் 450 இலட்சம் ரூபாய்களால் மட்டும் குறைந்துள்ளது. 1959ம் ஆண்டு 12 சதவீதத்தால் உயர்ச்சியடைந்த இறக்குமதிகளின் அளவு, 1960ம் ஆண்டு 4 சதவீதத்திலும் சிறிது கூடிய ஒரு சதவீதத்தால் குறைவுற்றது. ஆனால் 1960ம் ஆண்டில் முக்காற்பகுதிவரை, 1959ம் ஆண்டு மட்டத்திற்குக் கீழே வீழ்ச்சியடைவதற்கான அறிகுறிகள் ஒன்றும் காணப்படவில்லை. இதற்கு மாறாக இறக்குமதிகளின் அளவு, ஒரு கணிசமான முறையில் 1959ம் ஆண்டு மட்டத்திற்கு மேற்படும் என்பதற்கான அறிகுறிகள்தாம் காணப்பட்டன. இவ்விதம், ஆண்டின் மூன்றாம்காற்பகுதியில் இறக்குமதிகளின் அளவு, 1959ம் ஆண்டுச் சராசரியிலும் பார்க்க 12 சதவீதம் மேலதாகச் சென்று கொண்டிருந்தது. சிலவகை இறக்குமதிகளில், குறிப்பாக ஆடையணிகள் மற்றும் ''ஏனைய நுகர்ச்சிப் பொருட்கள்'' போன்ற நுகர்ச்சிப் பொருட்களின் தொகுதியில் காணப்பட்ட இறக்குமதிகளின் அளவுகள், கணிசமான கையிருப்புக்கள் சேர்க்கப்படுகின்றன, என்ற ஒரு அபிப்பிராயத்திற்கு கருதத்தகுந்தஆதாரம் அளித்தது. ஆயினும் ஆண்டின் முற்காற்பகுதி முடிவில் புகுத்தப்பட்ட சுங்கத் தீர்வைகள், இறக்குமதிக் கட்டுப்பாடுகள், கொடுகடன் கட்டுப்பாடுகள் முதலிய நடவடிக்கைகளின் பயனாக இவ்வகை நுகர்ச்சிப் பொருட்களின் இறக்குமதிகளில் குறிப்பிடத்தகுந்த சுருக்கம் ஏற்பட்டது.

இவ்வகை நடவடிக்கைகளால் பெரிதும் பாதிக்கப்பட்ட ''ஏனைய நுகர்ச்சிப் பொருட்கள்'' என்ற தொகுப்பைச் சேர்ந்த பொருட்களின் இறக்குமதி இவ்வாண்டின் கடைக்காற்பகுதியில் 39 சதவீதத்தால் குறைந்தது. வெளிநாட்டு கைத்தொழில் இயக்கம் மந்தம் அடைந்ததன் பயனாக ஏற்றுமதி விலைவாசிகள், குறிப்பாக இரப்பரின் விலைவாசிகள், (பாதகமான முறையில்) விரைவில் பாதிக்கப்பட்டன. ஆனால் இதை ஈடுசெய்யும் அளவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விலைவாசிகள் வீழ்ச்சியடையவில்லை. உண்மையாக சகல இறக்குமதிகளுக்குமாக உள்ள விலைக்குறிகாட்டி மாற்றமின்றி இருந்தது. நுகர்ச்சிப் பொருட்களின் தொகுதிக்கான இறக்குமதி விலைக்குறிகாட்டி 1 சத வீதத்திலும் சிறிது குறைந்த சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. மூலதனப் பொருட்களின் தொகுதியில், ஒரு சிறு அதிகரிப்பு ஏற்பட்டது.

### ஏற்றுமதிகள்

பின்னிணைப்பு I, அட்டவணை 27 முதல் அட்டவணை 31 வரை பெறுமானம், அளவு, விலை பற்றிய புள்ளி விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

**தேயிலை :**—கடந்த இரு ஆண்டுகளில் தேயிலை உற்பத்தி மிக உயர்ந்த ஒரு மட்டத்தை அடைந்ததைப் பின்தொடர்ந்து, 1960ம் ஆண்டு இலங்கையின் தேயிலை உற்பத்தி குறிப்பிடத்தகுந்த வகையில் அதிகரித்தது. என்றுமில்லாத 4350 இலட்சம் ருத்தல்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இவ்வாண்டு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவும் அதிகரித்தது. 1960ம் ஆண்டின் உலகத் தேயிலை உற்பத்தி, 1959ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பின்னவீதமாக ஏறக்குறைய 1 சத வீதத்தால் குறைந்தது என்பதைக் காட்டும் வண்ணம் இதுகாறும் கிடைத்த தற்காலிகமான தரவுகள் அமைந்துள்ளன. இலங்கையின் உற்பத்தியில் ஏற்பட்ட விரிவு இதற்கு ஒரு விதிவிலக்காகும். ஏனைய பிரதான தேயிலை உற்பத்தி நாடுகளின் உற்பத்தியில் ஏற்பட்ட சுருக்கங்கள் இவ்விரிவை ஈடுசெய்தது. உண்மையாக, உலக உற்பத்தியிலும், ஏற்றுமதிகளிலும் ஏற்பட்ட இச்

சுருக்கம் சராசரித் தேயிலை விலைவாசிகளில் ஒரு சிறு அநுகூலமான பயனைக் கொண்டுவந்தது, எனத் தோன்றுகிறது. 1960ம் ஆண்டு இலண்டனில் சகல வகையான தேயிலைகளினதும் சராசரி விலை முந்தைய ஆண்டிலும் பார்க்க 4 சத வீதத்தால் கூடியதாக விளங்கியது. பிரதான இறக்குமதி நாடுகளில், நுகர்ச்சியின் பொருட்டு இறக்குமதிசெய்யப்பட்ட தேயிலையின் அளவு முந்தைய ஆண்டைப் போலவே நிலைத்து நின்றது. பிரித்தானிய நாட்டின் இறக்குமதிகள் முந்தைய ஆண்டிலும் பார்க்க அதிகரித்தன.

1959ம் ஆண்டு ஒரு இராத்தல் ரூ. 2.72 சதமாக விளங்கிய இலங்கைத் தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலை, 1960ம் ஆண்டு ரூ. 2.67 சதத்திற்கு குறைந்தது. ஆயினும் 1959ம் ஆண்டு கொழும்பு ஏலத்தில் ஒரு இருத்தல் ரூ. 1.85 சதமாக விளங்கிய சகலவகைத் தேயிலைகளினதும் சராசரி விலை, 1960ம் ஆண்டு ரூ. 1.88 சதத்திற்கு அதிகரித்தது. இச் சீர்த்திருத்தம் கீழ்த்தர விலை வாசித் தேயிலைகளின் மேல், குறிப்பாக மத்திய பிரதேச, தாழ்ந்த பிரதேசத் தேயிலைகளின் மேல் ''பெறுமான விகிதவரி'' கொண்டு வந்த பாதிப்பின் விளைவால் ஏற்பட்டது. இதற்கு மாறாக, உயர்ந்த விலைவாசித் தேயிலைகள் கூடிய மொத்தத் தீர்வையை இறுக்கின்றமையால், 1959ம் ஆண்டு ஒரு இருத்தல் ரூ. 2.13 சதமாக விளங்கிய உயர்ந்த பிரதேசத் தேயிலைகளின் கொழும்பு ஏல விலை 1960ம் ஆண்டு ரூ. 2.03 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை II—17

### தேயிலை ஏற்றுமதிகளின் தொகையும் விலைகளும்

| ஆண்டு | ஏற்றுமதிகள் | | கொழும்பு ஏலசராசரி விலை ஒரு இருத்தலுக்கு | | | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை இலட்சம் இருத்தல் கள் | ஏற்றுமதி விலை ஒரு இருத்த லுக்கு ரூ. சதம். | உயர்ந்த பிரதேச ரூ. சதம். | மத்திய பிரதேச ரூ. சதம் | தாழ்ந்த பிரதேச ரூ. சதம். | சகலவித தேயிலை ரூ. சதம். |
| 1955 ... | 3620 | 3.30 | 2.34 | 2.04 | 2.40 | 2.24 |
| 1956 ... | 3480 | 3.00 | 2.50 | 1.96 | 1.88 | 2.16 |
| 1957 ... | 3680 | 2.78 | 2.05 | 1.61 | 1.88 | 1.86 |
| 1958 ... | 4110 | 2.75 | 2.11 | 1.51 | 1.48 | 1.73 |
| 1959 ... | 3840 | 2.72 | 2.13 | 1.69 | 1-67 | 1.85 |
| 1960 ... | 4100 | 2.67 | 2.03 | 1.75 | 1.83 | 1.88 |

மூலங்கள்: இலங்கைச்சுங்க புள்ளி விபரங்கள்.
கொழும்புத் தேயிலைத் தரகர் சங்கம்

**இரப்பர்:**—1960ம் ஆண்டு இலங்கையின் இரப்பர் உற்பத்தி முந்தைய ஆண்டிலும் பார்க்க 6 சதவீத அதிகரிப்பைக் காட்டி 2180 இலட்சம் இருத்தல்களுக்கு உயர்ந்தது. எட்டு ஆண்டுகளாக இயங்கிக்கொண்டிருக்கும் மாற்று நடுகைத் திட்டத்தின் பயனாய் ஏற்பட்ட உற்பத்தி அதிகரிப்புகள் கணிசமானவையாக இல்லை. ஏன் எனில் மாற்று நடுகை செய்யப்பட்ட பரப்பில் ஒரு பெரும்பகுதி இன்னும் உற்பத்தியளிக்க ஆரம்பிக்கவில்லை. 1960ம் ஆண்டில் உற்பத்தி செய்யப் பட்ட இரப்பர் 1958ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட தொகையிலும் பார்க்க இன்னும் குறைவாகவேயுள்ளது.

1958ம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து மேலேறத் தொடங்கிய இரப்பரின் உலக விலைவாசி ஏறக்குறைய 1959ம் ஆண்டின் இறுதிவரை கிட்டத்தட்ட தொடர்ச்சியாக உயர்ந்தது. பிரதான நுகர்ச்சித் தேசங்களின் திரள்களிலிருந்த இரப்பர் விற்பனை செய்யப்பட்டமையால் தற்காலிகமாக மட்டும் இவ்விலைவாசி உயர்ச்சி தடைப்பட்டது. 1959ம், 1960ம் ஆண்டுகளில் உற்சாகமூட்டத்தக்க விலைவாசிகள் ஏறக்குறைய 1960ம் ஆண்டின் இரண்டாம் காற்பகுதிவரை தொடர்ந்து விளங்கியன. அதன் பின்னர் விலைவாசிகளில் ஒரு தீட்சணமான வீழ்ச்சி ஏற்பட ஆரம்பித்தது. இப்போக்கு கிட்டத்தட்ட ஆண்டு

முடிவுரை தொடர்ந்து சென்றது. இவ் வீழ்ச்சியும் பிரதான கைத்தொழில் நாடுகளின் கைத்தொழில் இயக்கத்தில் ஏற்பட்ட மாறுதலும் ஒரே காலத்தில் இணைந்து நிகழ்ந்தன. மேலும் இரப்பரின் பாவிப்புப்பற்றிய புள்ளி விபரங்கள் கைத்தொழில் இயக்கத்தில் ஏற்பட்ட மேற்படி மாற்றத்தைப் பிரதிபலித்தன. ஆண்டின் மூன்றும் காற்பகுதியில் ஐக்கிய அமெரிக்க நாடுகளில், இயற்கை இரப்பரின் பாவிப்பு, முந்தைய ஆண்டின் மூன்றும் காற்பகுதியில் இருந்த பாவிப்பில் 76 சத வீதமாகமட்டும் விளங்கியது. முந்தைய ஆண்டுகளில் இரப்பரின் விலை வாசிக்கு கணிசமான ஆதரவு அளிக்கும் வகையில் கிழக்கு ஐரோப்பிய நாடுகள், சீனா முதலிய நாடுகளிலிருந்து எழும் கொள்வனவுகள் அமைந்தன. ஆனால் 1960ம் ஆண்டு ஐக்கிய அமெரிக்க நாடுகள், மேற்கு ஐரோப்பியா முதலியவற்றின் கொள்வனவுகளில் ஏற்பட்ட சுருக்கத்துடனே, கிழக்கு ஐரோய்பியா, சீனா முதலியவற்றின் கொள்வனவுகளிலும் வீழ்ச்சி ஏற்பட்டது. 1960ம் ஆண்டில், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சீனா முதலியவற்றின் இயற்கை இரப்பர் பாவிப்பு 15 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றதென தற்காலிகமான புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

உலக நிரம்பல், கேள்வி ஆகிய நிலைமைகளில் ஏற்பட்ட இம்மாற்றங்களை, இலங்கை இரப்பரின் ஏற்றுமதி விலைகள் பிரதிபலித்தன. ஆண்டின் முதற் சில மாதங்களில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்குப் பின்னர், வைகாசி மாதம் தொடக்கம் இரப்பரின் விலைவாசி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தது. இரப்பர் விலைவாசியில் ஏற்பட்ட வீழ்ச்சியைத் தொடர்ந்து ஏற்றுமதித் தீர்வை குறைக்கப்பட்டது. 1959ம் ஆண்டு கார்த்திகை மாதம் ஒரு இருத்தல் இரப்பருக்கு 38 சதமாக உயர்த்தப்பட்ட ஏற்றுமதித் தீர்வை, விலைவாசி வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து 1960ம் ஆண்டு கார்த்திகை மாதம் 30 சதத்திற்குக் குறைக்கப்பட்டது.

அட்டவணை II—18

**இரப்பர்—உற்பத்தி, ஏற்றுமதிகள், விலைகள்**

| ஆண்டு | உற்பத்தி இலட்சம் இருத்தல்கள். | ஏற்றுமதி இலட்சம் இருத்தல்கள். | ஏற்றுமதி விலை ஒரு இருத்தலுக்கு ரூ. சதம் | ஆர். எஸ். எஸ். எண் 1 க்கான கொழும்புச் சந்தை விலை ஒரு இருத்தலுக்கு ரூ. சதம். |
|---|---|---|---|---|
| 1955 .. .. .. .. | 2100 | 2220 | 1.58 | 1.28 |
| 1956 .. .. .. .. | 2140 | 1930 | 1.52 | 1.45 |
| 1957 .. .. .. .. | 2200 | 2090 | 1.44 | 1.16 |
| 1958 .. .. .. .. | 2240 | 2070 | 1.25 | 0.93 |
| 1959 .. .. .. .. | 2050 | 2060 | 1.45 | 1.25 |
| 1960 .. .. .. .. | 2180 | 2350 | 1.61 | 1.24 |

மூலம்: இலங்கை சுங்க புள்ளி விபரம்.

**தெங்கு உற்பத்திப் பொருட்கள்:**—உலகத்தின் தேங்காய் உற்பத்திச் சுருக்கம் முதன் முதலாக 1957ம் ஆண்டின் முற்பகுதியில் ஆரம்பிக்கத் தொடங்கி 1958ம் ஆண்டு ஊடாக தொடர்ந்து 1959ம் ஆண்டு இறுதி வரையும் சென்றது. ஆயினும் 1960ம் ஆண்டளவில் நிரம்பலின் அமைப்பில் ஓர் குறிப்பிடத்தகுந்த சீர்திருத்தம் ஏற்பட்டது. மலாயா, பிலிப்பைன் தீவுகள் முதலிய நாடுகளின் கொப்பரா, தேங்காய் எண்ணெய் ஆகியவை உலகச் சந்தைகளில் அதிகரித்த முறையிற் கிடைக்கத் தொடங்கின. தேங்காய்களின் நிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்புடன், உலக உபயோகத்திற்குக் கிடைத்த கொழுப்புகள், எண்ணெய்கள், குறிப்பாக சோயா அவரை எண்ணெய், முதலியவற்றின் அதிகரிப்பும் அதேவேளையில் ஏற்பட்டது.

ஆயினும் 1960ம் ஆண்டு இந்த உற்பத்திப் பொருட்களின் கேள்வி ஒரு குறிப்பிடத்தகுந்த வகையில் அதிகரித்ததாகத் தெரியவில்லை. இதன் விளைவாக முன்னர் உயர்ந்த விலைமட்டங்களை அடைந்திருந்த தெங்கு உற்பத்திப் பொருட்களின் விலைவாசி ஆண்டு முழுவதும் விரைவாக வீழ்ச்சியடைந்தது. மூன்று பிரதான தெங்கு உற்பத்திப் பொருட்களுக்கான இலங்கை மகாவங்கியின் வர்த்தக குறிகாட்டிகள், 1960ம் ஆண்டின் முதற்காற்பகுதியின் மேற்படி தொகுதிக்கான ஏற்றுமதி விலைக்குறிகாட்டி 128 (1948=100) ஆக இருந்ததென் பதையும், அது தொடர்ச்சியாக 28 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்து 1960ம் ஆண்டின் கடைக்காற்பகுதியில் 92 ஆக இருந்தது என்பதையும் காட்டுகின்றது. 1959ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1960ம் ஆண்டில் தேங்காய் எண்ணெயின் விலைவாசியில் ஏற்பட்ட வீழ்ச்சிதான் அதிதீட்சணமானது ஆகும். தேங்காய்த் துருவல், கொப்பரா முதலியவற்றின் விலைவாசிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிகள் குறைந்த விகிதாச்சாரமாகவே விளங்கியது. ஏற்றுமதிசெய்யப்பட்ட தேங்காய் எண்ணெயின் அளவு சுருக்கமடைய, ஏற்றுமதிசெய்யப்பட்ட தேங்காய்துருவலின் அளவில் 5 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டது.

தெங்கு உற்பத்திப் பொருட்களின் விலைவாசிகளில் ஏற்பட்ட குறிப்பிடத் தகுந்த வீழ்ச்சியுடனே, ஏற்றுமதிகளின் அளவிலும் வீழ்ச்சி ஏற்பட்டது. 1959ம் ஆண்டில் 125 (1948=100) ஆக விளங்கிய ஏற்றுமதியின் அளவுக் குறிகாட்டி 1960ம் ஆண்டு 109 ஆக விளங்கியதென இலங்கை மகாவங்கியின் வர்த்தகக் குறிகாட்டிகள் காட்டுகின்றன. இஃது 13 சதவீத வீழ்ச்சியாகும். தெங்கு உற்பத்தி பொருட்களின் விலைவாசிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிகளும் பெரிதாகவே யிருந்தன. 1959ம் ஆண்டின் ஏற்றுமதிகளின் அளவு, அதற்கு முற்பட்ட இரு ஆண்டுகளில் நிலவிவந்த அசாதரணமான கீழ் மட்டங்களில் இருந்து சீர்பட்ட தெனினும், 1960ம் ஆண்டு அஃது மீண்டும் ஒடுங்கியது.

அட்டவணை II—19

**பிரதான தெங்கு உற்பத்திபொருட்கள்—ஏற்றுமதிகள்—**
**தொகைகளும் விலைகளும்**

| பண்டம் | 1958 | | 1959 | | 1960 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை ஆயிரம் அந்தர்கள் | ஏற்றுமதி விலை ஒரு அந்தர் ரூ. சதம். | தொகை ஆயிரம் அந்தர்கள் | ஏற்றுமதி விலை ஒரு அந்தர் ரூ. சதம். | தொகை ஆயிரம் அந்தர்கள் | ஏற்றுமதி விலை ஒரு அந்தர் ரூ. சதம். |
| கொப்பரா .. .. | 554 | 52.97 | 852 | 60.52 | 583 | 55.23 |
| தேங்காயெண்ணை .. .. | 887 | 69.80 | 1389 | 84.41 | 1110 | 71.83 |
| தேங்காய்த்துருவல் .. | 1135 | 63.72 | 1050 | 71.45 | 1099 | 65.23 |

மூலம்: இலங்கைச் சுங்கப் புள்ளிவிபரங்கள்.

### இறக்குமதிகள்

இறக்குமதிகளின் அமைப்பு பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை II—20

**இறக்குமதிகளின் அமைப்பு**

| | இலட்சம் ரூபாய்களில் பெறுமானம் | | | மொத்த இறக்குமதியில் சதவிகிதம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1958 | 1959 | 1960 | 1918 | 1959 | 1960 |
| **உணவு, குடிவகை, புகையிலை— ..** | **7150** | **8120** | **7550** | **41 6** | **40 5** | **39.0** |
| அதில்:— | | | | | | |
| அரிசி .. .. .. .. | 2380 | 2830 | 2420 | 13.9 | 14.1 | 12.3 |
| கோதுமை மா .. .. .. | 670 | 1060 | 650 | 3.9 | 5.3 | 3.3 |
| சீனி .. .. .. .. | 870 | 750 | 790 | 5.1 | 3.8 | 4.0 |
| பாற்பண்ணை பொருட்கள் .. .. | 580 | 830 | 760 | 3.4 | 4.1 | 3.9 |
| மீன் உணவுப் பொருட்கள் .. .. | 920 | 890 | 1050 | 5.4 | 4.4 | 5.4 |
| கறிச்சரக்குகள் .. .. .. | 350 | 390 | 520 | 2.0 | 1.9 | 2.7 |
| **மூலப்பொருட்களும், தயாரிப்புகளும் —** | **10020** | **11930** | **11950** | **58.4** | **59.5** | **61.0** |
| அதில்:— | | | | | | |
| நில எரி எண்ணை உற்பத்தி பொருட்கள் | 1250 | 1340 | 1220 | 7.3 | 6.7 | 6.2 |
| வளமாக்கிகள் (உரம்) .. .. | 470 | 610 | 580 | 2.7 | 3.0 | 3.0 |
| சிமெந்து .. .. .. .. | 130 | 220 | 180 | 0.8 | 1.1 | 0.9 |
| இரும்பும் எஃகும் .. .. .. | 680 | 850 | 880 | 4.0 | 4.2 | 4.5 |
| இயந்திரத்தொகுதி .. .. .. | 890 | 1070 | 920 | 5.2 | 5.3 | 4.7 |
| ஆடைவகைகள் .. .. .. | 1600 | 1470 | 1540 | 9.3 | 7.3 | 7.9 |
| இரசாயணப்பொருட்கள், மருந்து வகைகள், சாயப் பொருட்கள் .. | 420 | 560 | 590 | 2.4 | 2.8 | 3.0 |
| போக்குவரத்து சாதனங்கள் மோட்டோர் வண்டிகள் .. .. | 360 | 500 | 530 | 2.1 | 2.5 | 2.7 |
| ஏனைய போக்குவரத்துச் சாதனங்கள் | 710 | 1270 | 1010 | 4.1 | 6.3 | 5.2 |
| காகிதமும், காகிதமட்டையும் .. | 290 | 340 | 390 | 1.7 | 1.7 | 2.0 |
| **மொத்த இறக்குமதிகள் .. ..** | **17170** | **20050** | **19600** | **100.0** | **100.0** | **100.0** |

மூலம்: இலங்கைச் சுங்கப் புள்ளி விபரம்.

1959ம் ஆண்டு இறக்குமதிகளின் அளவில் ஏற்பட்ட விரைவான உயர்ச்சி 1960ம் ஆண்டில் தடைசெய்யப்பட்டது. 1960ம் ஆண்டு முடிவில், இறக்குமதிகளின் மட்டம் குறைந்துகொண்டு செல்கின்றது என்ற அறிகுறிகள்கூடக் காணப்பட்டன. ஆண்டு முழுவதிலும் இறக்குமதிகளின் அளவு 4 சதவீதத்திலும் மேலாக வீழ்ச்சியடைந்தது. நுகர்ச்சிப் பொருட்கள், மூலதனப் பொருட்கள் ஆகிய இரு தொகுதிகளிலும் இவ்வீழ்ச்சி சமவிகித முறையில் பிரதிபலித்தது.

ஆண்டு முழுவதற்குமாக பார்க்கும்பொழுது நுகர்ச்சிப் பொருட்களின் இறக்குமதியளவுகள் வீழ்ச்சியடைந்ததெனினும், ஆண்டின் முதல் மாதங்களில், நுகர்ச்சிப் பொருட்களின் இறக்குமதியளவில் சுருக்கம் ஏற்படக்கூடிய ஒரு போக்குகளும் காணப்படவில்லை. உண்மையில், முன்னெச்சரிக்கையாக பொருட்களின் கையிருப்புகளில், குறிப்பாக ''ஏனைய நுகர்ச்சிப் பொருட்களின்'' கையிருப்புகள் விரைவாகச் சேர்க்கப்படுகின்றதென்பதாகத் தோன்றியது. ஏனெனில் 1960ம் ஆண்டில் முதற்காற்பகுதியில் இந்த இறக்குமதிகள் முந்தைய ஆண்டு மட்டத்திலும்பார்க்க 42 சதவீதம் கூடிய ஒரு விகிதாச்சாரத்தில் சென்றுகொண்டிருந்தன. ஆண்டின் பிற்பகுதியில் இறக்குமதிகளின் பெறுமானம் குறைந்தது. ஆனல் இறக்குமதிக் கட்டுப்பாடுகள், கொடுகடன் கட்டுப்பாடுகள், இறக்குமதித் தீர்வை அதிகரிப்புகள் முதலியவற்றின் ஒருங்கிணைந்த பயன்களின் பாதிப்பு ஏற்பட ஆரம்பித்த பின்னர் 1960ம் ஆண்டின் நான்காம் காற் பகுதியில் தான் இறக்குமதிகளில் ஓர் சடுதியான வீழ்ச்சியுண்டானது. எனவே, ஆண்டின் நான்காம் காற்பகுதியில் இத்தொகுதி இறக்குமதிகளின் அளவு முதற்காற்பகுதியில் இருந்ததிலும் பார்க்க அரைவாசிக்கும் கீழே வீழ்ச்சியடைந்தன. இறக்குமதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தொகுதி மேலதிகமான கொடுகடன் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டது. 1960ம் ஆண்டு தை மாதம் முதல் ஆவணி மாகம்

வரையுள்ள காலத்தில் இந்த விடயங்களினது இறக்குமதிகளின் வருடாந்த விகிதாச்சாரம் 1410 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது. ஆயினும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் பாதிப்பு மார்கழிமாதமளவில் இறக்குமதிகளை 540 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியடையச் செய்தது. மூலதனப் பொருட்களின் இறக்குமதியளவு முந்தைய ஆண்டில் இருந்த மட்டத்திலும் பார்க்க சில சதவீதப் புள்ளிகளால் குறைந்ததெனினும், இஃது ஒரு உயர்ந்த மட்டத்திலேயே தங்கி நின்றது.

1960ம் ஆண்டில் இறக்குமதியான உணவு குடிவகை ஆகியவற்றின் அளவு 1959ம் ஆண்டிலும் பார்க்க 6 சதவீதத்தால் குறைந்தது ஆகும். ஆடைவகைகள் விடயத்தில் 1959ம் ஆண்டில் ஏற்பட்ட வீழ்ச்சி, 1960ம் ஆண்டு மீண்டும் ஏற்பட்டது.

ஆண்டு முழுவதற்குமாக பார்க்கும் பொழுது சகல இறக்குமதிகளினதும் பெறுமானம் 20050 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1960ம் ஆண்டு 19600 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியடைந்தது. மேலேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டிருக்கும் வண்ணம், மொத்த இறக்குமதிகளில் மூலப்பொருட்கள், தயாரிப்புகள் ஆகியவற்றின் சதவீத பங்கு முந்தைய ஆண்டுகளின் போக்கைத் தொடர்ந்து, மீண்டும் உயர்ச்சியடைந்தது. ஆயினும் அரிசி கோதுமைமா முதலியவற்றின் இறக்குமதிகளின் பெறுமானத்தில் ஒரு குறிப்பிடத்தகுந்த குறைப்பு காணப்பட்டது. 1959ம் ஆண்டில் 3890 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய இவற்றின் பெறுமானம் 1960ம் ஆண்டில் 3070 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியடைந்தது. 1959ம் ஆண்டு இவ்விறக்குமதிகளில் ஏற்பட்ட ஒரு கணிசமான அதிகரிப்பைப்பின்தொடர்ந்து இக்குறைப்பு உண்டானது. மீன் உணவுப் பொருட்களினது இறக்குமதிகளின் பெறுமானம் 160 இலட்சம் ரூபாய்களால் உயர்ந்து 1050 இலட்சம் ரூபாய்களையடைந்த இம்மாற்றம் தான், 1960ம் ஆண்டில் உண்டான ஒரு குறிப்பிடத்தகுந்த அதிகரிப்பாகும்.

கணிசமான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட மூலதனப்பொருட்களின் பெறுமானம் 1959ம் ஆண்டில் எய்திய உயர்ந்த மட்டத்திலேயே தங்கி நின்றமை, இறக்குமதி அமைப்பில் ஒரு திருப்திகரமான அம்சமாகும். இவ்வகையில் 1959ம் ஆண்டில் உரம், சிமெந்து, இரும்பு - எஃகு முதலியனவற்றின் இறக்குமதிகள் முறையே 610 இலட்சம் ரூபாய்களாகவும் 220 இலட்சம் ரூபாய்களாகவும் 850 இலட்சம் ரூபாய்களாகவும் விளங்கியது. முந்திய ஆண்டில்அவற்றின் பெறுமானம் முறையே 580 இலட்சம் ரூபாய்களாகவும் 180 இலட்சம் ரூபாய்களாகவும், 880 இலட்சம் ரூபாய்களாகவும் இருந்தது.

**வர்த்தக பொது அமைப்பு.**

பிரதான பிரதேசங்களின்படியும் நாணய பிரதேசங்களின்படியும், பாகுபடுத்தப்பட்ட வர்த்தகத்தின் பொதுஅமைப்பை, பின்னிணைப்பு I இல் உள்ள 31ம் அட்டவணை தருகின்றது.

முந்தைய ஆண்டுகளைப் போலவே, 1960ம் ஆண்டிலும் ஸ்டேர்லிங் பிரதேசம் இலங்கையின் வர்த்தகத்தில் முக்கிய பங்கு வகித்தது. இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளில் 52.2 சதவீதம் இப்பிரதேசத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இப்பிரதேசத்திலிருந்து இலங்கை இறக்குமதிசெய்தது மொத்த இறக்குமதிகளில் 53.8 சதவீதமாகும். இலங்கை இப்பிரதேசத்துடன் நடத்தும் வர்த்தகத்தில் ஏற்படும் வழக்கமான வர்த்தக எதிரிடை 1959ம் ஆண்டில் திரும்பவும் தோன்றி 1960ம் ஆண்டிலும் தொடர்ந்தது. ஆனால் 1959ம் ஆண்டில் ஏற்பட்ட 1779 இலட்சம் ரூபாய்களான இவ்வர்த்தக எதிரிடை 1960ம் ஆண்டில் 968 இலட்சம் ரூபாய்களுக்குக் குறைந்தது. ஏற்றுமதிகளின் பெறுமானம் விரிந்தமையாலும், இறக்குமதிகளின் பெறுமானம் வீழ்ந்தமையாலும் வியாபாரத்துறையில் இந்தக் குறை ஏற்பட்டது. இவ்வகையில் தேயிலையின் ஏற்றுமதிகள் 540 இலட்சம் ரூபாய்களால் அதிகரிக்க, இயந்திரத்தொகுதிகளின் இறக்குமதிகள் 460 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியடைந்தது.

டொலர் பிரதேச வர்த்தகத்தில் வழக்கமாக ஏற்படும் வியாபார மிகை 1959ம் ஆண்டு விளங்கிய 1041 இலட்சம் ரூபாய்களிலிருந்து, 1960ம் ஆண்டு கணிசமான முறையில் 1617 இலட்சம் ரூபாய்களுக்கு சீர்திருத்தம் அடைந்தது.

1959ம் ஆண்டு 1581 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய இறக்குமதிகளின் பெறுமானம், 1960ம் ஆண்டில் 958 இலட்சம் ரூபாய்களாக சுருங்கியதின் விளைவாக இச்சீர்திருத்தம் ஏற்பட்டது. ஏற்றுமதிகளின் பெறுமானம் சிறிது (47 இலட்சம் ரூபாய்களால்) வீழ்ச்சியடைந்தது. டொலர் பிரதேசத்திலிருந்து வருவிக்கப்பட்ட உணவுப்பொருட்களின் இறக்குமதிகளில் உண்டான குறிப்பிடத்தக்க குறைப்புக் காரணமாக, இறக்குமதிகளின் பெறுமானத்தில் இந்த வீழ்ச்சி ஏற்பட்டது. இவ்வகையில் அரிசி, கோதுமை மா, ''ஏனைய உணவுப்பொருட்கள்'' முதலியனவற்றின் இறக்குமதிகள் முறையே 246 இலட்சம் ரூபாய்களாலும் 397 இலட்சம் ரூபாய்களாலும், 113 இலட்சம் ரூபாய்களாலும் வீழ்ச்சியடைந்தன. 1959ம் ஆண்டில் விசேட உதவித் திட்டங்களின் கீழ் அரிசி, கோதுமை மா, முதலியன இலங்கைக்கு கிடைக்கும்படி ஒழுங்குகள் செய்தமையால், அவ்வாண்டில் இவற்றின் இறக்குமதிகள் உயர்ந்த மட்டங்களை அடைந்திருந்தன. தயாரிப்பு பண்டங்களின் இறக்குமதிகள் 60 இலட்சம் ரூபாய்களாக ஓரளவுக்கு அதிகரித்தது.

1960ம் ஆண்டில், ஐரோப்பிய பொருளாதாரச் சமுதாயத்துடன் இலங்கை நடத்திய வர்த்தகம், இலங்கையின் இறக்குமதிகளுக்கு இப்பிரதேசம் ஒரு முக்கிய துறையாய் வளர்ந்து வருகிறதென்பதைப் பிரதிபலிக்கின்றது. 1950ம் ஆண்டு 508 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய ஐரோப்பிய பொருளாதாரச் சமுதாயத்திலிருந்து வரும் இறக்குமதிகள், 1960ம் ஆண்டு 1972 இலட்சம் ரூபாய்களுக்கு உறுதியாக உயர்ந்தன. ஆயினும் இப் பிரதேசத்திற்கு அனுப்பப்பட்ட ஏற்றுமதிகள் ஒரு நிலையான அமைப்பைக் காட்டவில்லை. 1950ம் ஆண்டு ஏற்றுமதிகளின் பெறுமானம் 1941 இலட்சம் ரூபாய்களாகவும், 1960ம் ஆண்டில் 1814 இலட்சம் ரூபாய்களாகவும் விளங்கின. ஆனால் மேற்கூறிய காலப் பரப்பில் இப் பிரதேசம் உயர்ந்த விலைகள் கொடுத்து அதிகமான இரப்பரைக் கொள்வனவு செய்தபோது ஏற்றுமதிகளின் பெறுமானம் செங்குத்தான முறையில் 3147 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்ந்தது. 1959ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1960ம் ஆண்டில் ஏற்றுமதிகளின் பெறுமானத்தில் ஏற்பட்ட 228 இலட்சம் ரூபாய் வீழ்ச்சி ஜெர்மனிக்கு அனுப்பப்பட்ட தேங்காயெண்ணை ஏற்றுமதிகள் 201 இலட்சம் ரூபாய்களில் இருந்து ஒரு இலட்சம் ரூபாய்களுக்கு குறைந்ததன் காரணமாக உண்டானது.

சீனாவுடன் இலங்கை செய்யும் வர்த்தகம் ஒரு வர்த்தக பற்று வரவு உடன்படிக்கையின் கீழ் நடக்கிறது. 1960ம் ஆண்டு இலங்கைக்கும் சீனாவுக்குமிடையே உள்ள பண்டமாற்று சம்பந்தப்பட்ட தாயேடு, 17000 மெட்றிக் தொன்கள் கொண்ட இரப்பரை இலங்கை ஏற்றுமதி செய்வதற்கும் 160000 மெட்றிக் தொன்கள் கொண்ட அரிசியை இறக்குமதி செய்வதற்கும் வழிவகுத்துள்ளது. மேற்படி ஒவ்வொரு விடயத்தின் பெறுமானமும் 640 இலட்சம் ரூபாய்கள் எனக் குறிக்கப்பட்டுள்ளது. இத்தாயேடு ஏனைய சில ஏற்றுமதி இறக்குமதிகளுக்கும் ஏற்பாடு செய்தது. பின்வரும் அட்டவணை, சீனாவுடன் இலங்கை நடத்திய வர்த்தகம் பற்றிய விபரங்களைத் தருகின்றது.

அட்டவணை II—21

**சீனாவுடன் இலங்கை நடத்திய வர்த்தகம்**

| ஆண்டு | ஏற்றுமதிகள் | | இறக்குமதிகள் | | வர்த்தக நிலுவை |
|---|---|---|---|---|---|
| | பெறுமானம் இலட்சம் ரூபாய்கள் | மொத்த உள்நாட்டுஏற்றுமதிகளின் சத விகிதம் | பெறுமானம் இலட்சம் ரூபாய்கள் | மொத்த இறக்குமதிகளின் சத விகிதம் | இலட்சம் ரூபாய்கள் |
| 1955 .. .. .. | 1210 | 6.5 | 800 | 5.3 | +410 |
| 1956 .. .. .. | 1820 | 11.0 | 1340 | 8.2 | +480 |
| 1957 .. .. .. | 1670 | 10.5 | 840 | 4.6 | +830 |
| 1958 .. .. .. | 780 | 4.7 | 1520 | 8.8 | —740 |
| 1959 .. .. .. | 780 | 4.6 | 1500 | 7.5 | —720 |
| 1960 .. .. .. | 1210 | 6.6 | 1320 | 6.8 | —120 |

மூலம்: இலங்கை சுங்க புள்ளி விபரங்கள்.

1960ம் ஆண்டிற் காணப்பட்ட 1206 இலட்சம் ரூபாய்கள் ஆகிய ஏற்றுமதிகளின் பெறுமானம், 1959ம் ஆண்டில் இருந்த 777 இலட்சம் ரூபாய்களாகிய பெறுமானத்திலும் பார்க்க கணிசமான முறையில் உயர்ந்ததாகும். கூடிய இரப்பர் (38.9 ஆயிரம் மெட்றிக் தொன்கள்) ஏற்றுமதி செய்யப்பட்டமையால், இந்த அதிகரிப்பு ஏற்பட்டது. 1959ம் ஆண்டில் இரப்பர் ஏற்றுமதிகள் ஆக 23.7 ஆயிரம் மெட்றிக் தொன்களாக மட்டும் விளங்கின. 1959ம் ஆண்டு 1500 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய, சீனுவிலிருந்துவந்த இறக்குமதிகள், 1960ம் ஆண்டில் 1324 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியுற்றது. இறக்குமதிசெய்யப்பட்ட அரிசியின் அளவில் வீழ்ச்சி ஏற்பட்டதன் விளைவாக இக் குறைவு பெரும்பாலும் உண்டாயிற்று. அரிசியை நீக்கிய இறக்குமதிகள், ஆடைவகைகள், சில உணவுப் பொருட்கள்முதலியனவற்றைக் கொண்டதாகும். சீனுவிலிருந்து வரும் ஆடைவகைகளின் இறக்குமதிகள் மீண்டும் 1960ம் ஆண்டில் அதிகரித்துள்ளன. இலங்கைக்கு ஆடைவகைகள் வழங்கும் நாடுகளில் ஜப்பான், இந்தியா ஆகியவற்றிற்கு அடுத்ததாக சீனு மூன்ருவது இடத்தை இப்பொழுது பெற்றிருக்கின்றது.

சோவியத் ரஷ்யாவுடனும், ஏனைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும் செய்த வர்த்தகப் பற்று வரவு உடன்படிக்கைகள் இந்த ஆண்டிலும் தொடர்ந்து இயங்கின. 1960ம் ஆண்டில், இந்நாடுகளுக்கு அனுப்பப்பட்ட ஏற்றுமதிகள் இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளில் 3.0 சதவீதமாக விளங்கின. இந்நாடுகளுக்கு அனுப்பப்பட்ட ஏற்றுமதிகளின் மொத்த பெறுமானமாகிய 556 இலட்சம் ரூபாய்களில் 478 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய இரப்பர் ஏற்றுமதிகளே இந்நாடுகளுக்கு அனுப்பப்பட்ட மொத்த ஏற்றுமதிகளின் பிரதான பங்கை கொண்டதாக இருந்தது. ரஷ்யா கொள்வனவு செய்த இரப்பரில் ஒரு குறிப்பிடும்படியான அதிகரிப்பு ஏற்பட்டது. 1959ம் ஆண்டு 220 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய இக்கொள்வனவு 1960ம் ஆண்டில் 318 இலட்சம் ரூபாய்களாக இருந்தன. 1959ம் ஆண்டு இலங்கையிலிருந்து இரப்பர் கொள்வனவு செய்யாத ருமேனியா, 1960ம் ஆண்டில் 148 இலட்சம் ரூபாய்கள் பெறுமானமுள்ள இரப்பரை இலங்கையிடமிருந்து கொள்வனவு செய்தது. செக்கோஸ்லவேக்கியா, புல்கேரியா, ஹங்கேரி, போலாந்து முதலிய நாடுகளுக்கு அனுப்பப்பட்ட ஏற்றுமதிகளின் அளவு மிகமிக சிறியதாகும். இப்பிரதேசத்திலிருந்து வருவிக்கப்பட்ட இறக்குமதிகள் 1959ம் ஆண்டு இருந்த 234 இலட்சம் ரூபாய்களிலிருந்து, 1960ம் ஆண்டு 214 இலட்சம் ரூபாய்களுக்கு சிறிது வீழ்ச்சியடைந்தன. சோவியத் ரஷ்யாவிலிருந்து வந்த இறக்குமதிகள் ஓரளவு அதிகரித்துள்ளன. இலங்கையின் மொத்த இறக்குமதித் தேவைகளில் மிகச் சிறியதொரு விகிதத்தையே (1.1 சதவீதம்) கிழக்கு ஐரோப்பிய நாடுகள் முன்னர் போல் தொடர்ந்தும் வழங்கின.

அட்டவணை II—22

**சோவியத் ரஷ்யாவுடனும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும் இலங்கை நடத்திய வர்த்தகம்**

| ஆண்டு | ஏற்றுமதிகள் | | இறக்குமதிகள் | | வர்த்தக நிலுவை |
|---|---|---|---|---|---|
| | பெறுமானம் இலட்சம் ரூபாய்கள் | மொத்த உள் நாட்டு ஏற்றுமதிகளின் சத விகிதம் | பெறுமானம் இலட்சம் ரூபாய்கள் | மொத்த உள் நாட்டு இறக்குமதிகளின் சத வீதம் | இலட்சம் ரூபாய்கள் |
| 1956 .. .. .. | 13 | 0.08 | 76 | 0.47 | —63 |
| 1957 .. .. .. | 65 | 0.41 | 99 | 0.55 | —34 |
| 1958 .. .. .. | 247 | 1.49 | 87 | 0.51 | +160 |
| 1959 .. .. .. | 273 | 1.56 | 234 | 1.16 | + 39 |
| 1960 .. .. .. | 556 | 3.04 | 214 | 1.09 | +342 |

மூலம்: இலங்கை சுங்க புள்ளி விபரங்கள்.